# பாதுஷா நேரடியாக உங்களுடன் மிக விரைவில் உரையாட வருகின்றது

## மனம் திறந்த மடல்

## அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

கண்ணியத்திற்குறிய அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்துடைய நலன்விரும்பிகளே! முதற்கண் நான் உங்களிடம் உரையாட வரும் விடயங்களை இவ்வாக்கியம் மூலம் சுருங்கச் சொல்கிறேன் ''மு.'.மீன்களே! நீங்கள் அனைவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கையிற்றைப் பலமாக பற்றிப்பிடியுங்கள் நீங்கள் பிரிந்துவிட வேண்டாம் உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப்பாருங்கள். (ஆலஇமரான் : 103)

கண்ணியவான்களே! நாங்கள் உண்மைக்காக எவ்வாறு செயற்பட்டுக் கொன்டிருக்கின்றோம் என்பதை சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். தாங்கள் யாவரும் தங்களது சக்திக்கு உட்பட்டளவுக்கு முயற்சி செய்வதை நாம் அறிவோம் ஆனாலும் நாங்கள் ஒன்றுபடாமல் எவ்வளவு செய்தாலும் அது ஸுன்னத் வல்ஜமாஅத்துடைய தரீக்காவுடைய தாகத்தை தீர்க்காது என்பதே தீர்ப்பு காரனம் எங்களில் வசதியுள்ளவர்கள் குறைவு ஆனால் தகுதியுள்ள ஆலிம்கள் இதர கல்விமான்கள் மற்றும் அவசியமாகவும் அவசரமாகவும் செயற்படுத்த வேண்டிய விடயம் அதிகம் உண்டு. கண்ணியவான்களே! நாம் குறிப்பிட வருவது என்னவென்றால் நாம் எல்லோரும் அமைப்பாக (Associations) ஒன்று சேர்ந்து ஒரு அமைப்பாக செயற்படுவோம் இதைத்தான் மேற்குறிப்பிட்ட வசனம் தெளிவுபடுத்துகிறது. எமது செயற்பாடாக உலகம் இன்னும் நாடு பூராகவும் நமது சேவைகளை செயற்படுத்த வேண்டும். அதன் முதற்கட்டமாக நாம் www.bathusha.com என்று இணையதளத்தின் முலம் பணி தொடர்கிறது இதில் 24h Online Radio, Bathusha Hot Message செயலாற்றுகிறது என்பதை மகிழ்வாய் அறியத்தருகிறோம். அடுத்த கட்டமாக சிறு சஞ்சிகை ஆதாரபிரசுரம் மூலம் உண்மையை உரிய இடத்திற்கு கொண்டு சேர்த்தல். இது போன்ற பல திட்டத்தை அமைத்து செயலாற்ற ஆயத்தமாக உள்ளோம் உங்கள் ஒத்துழைப்பை எதிர்பாக்கின்றோம். நம் உடன் பிரவாத சகோதரர்களுக்கு கபுருக்கு கொண்டு போய்ச்சேர்க்கும் கல்விப்போதனை மூலம் உதவுவோம். ''மு.'.மீன்களே! நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் தாராளமாக செலவு செய்யுங்கள் நிச்சயமாக அல்லாஹ் பிறருக்கு நன்மை செய்வோரை நேசிக்கின்றான்.'' (பகறா : 195)

கண்னியவான்களே! தாங்கள் செய்யும் நற்காரியத்தோடு இத்தலையாய காரியத்தையும் செய்வதற்குமுன்வருமாருகனிவாய் அறியத்தருகின்றோம். அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்துடையவர்களாகிய நாம் அனைவரும் காதிரியா தரீக்காவின் நறுமன ஊற்றில் வெளியாகியவர்களே காரனம் ஷேய்குனா செய்யிதுனா முஹய்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலிய்யல்லாஹு அன்ஹு ) அவர்களே அனைத்து தரீக்காவின் செய்காவார்கள். செய்யிது செய்குமார்களை பிரித்துப்பார்த்து தரீக்காவின் புனிதத்துவத்தை கெடுக்க வேண்டாம். நாம் எந்த தரீக்காவாக இருந்தளும் நாம் அல்லாஹ் ரஸுலின் அன்புக்கு ஏங்கும் பாவிகளே என்பதை நாம் மரவோம்.

Bathusha Hot Message செயற்படுத்த F<space>Bathushainfo என்று Type செய்து **40404** Send பன்னவும்

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

## உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்

AYTHUROOSIYYA SOCIAL DEVELOPMENT ASSOCIATION

Website: www.bathusha.com
E-mail: info@bathusha.com

Skype: bathushainfo

Facebook: bathusha kalmunai (((Search)))

Hotline: 0094775484598,0094715192843
Address: 139A, Sahib Road, Kalmunai, Srilanka 32300